DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate  At Oddanchatram

Case No : CC 376/2016

List of Witness : Lw2

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பழனியம்மாள் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பெருமாள் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :-   05/03/2026

(எதிரி ஆஜர்)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் பெரியகரட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. தேதி சரியாக ஞாபகம் இல்லை. மாலை 5.00 மணி இருக்கும் நானும், செல்லம்மாளும் எங்கள் ஊரில் உள்ள வள்ளியம்மா தோட்டம் அருகே விறகு எடுத்துக் கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. நாங்கள் சென்று பார்த்தபோது நாங்கள் சென்று பார்த்தபோது மலையானும், பிச்சைமுத்துவும் கன்னியம்மாளிடம் தகராறு செய்து கொண்டு இருந்தார்கள். கன்னியம்மாளின் சேலையை பிடித்து இழுத்து தகாத முறையில் நடக்க முயற்சித்தார்கள். நாங்கள் வருவதை பார்த்துவிட்டு இருவரும் இப்போது நீ தப்பிச்சிட்ட எப்ப இருந்தாலும் உன்னை விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். பின்பு சம்பவம் தொடர்பாக கன்னியம்மாளும், நாங்களும் அம்பிளிக்கை காவல் நிலையம் வந்து புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு கன்னியம்மாள் கொடுத்தது தான். புகார் மனுவில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி தான் பிச்சைமுத்து ஆவார். கன்னியம்மாள் இறந்துவிட்டார். மற்றொரு எதிரியான மலையானும் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணையின் போது ஆஜர் இல்லை. எதிரி குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2026.03.05 17:33:16 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 05/03/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 376/2016

List of Witness : Lw3

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்லம்மாள் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 05/03/2026

(எதிரி ஆஜர்)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் பெரியகரட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பிச்சைமுத்து. அவர் எனது ஊர்க்காரர். அவரது மனைவி லட்சுமி எனக்கு பழக்கம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

நானும், பழனியம்மாளும் சேர்ந்து விறகு பொருக்க செல்வது வழக்கம் என்றால் சரிதான். அப்படி ஒரு நாள் நானும், பழனியம்மாளும் விறகு பொருக்க சென்றபோது கன்னியம்மாளின் அலறல் சத்தம் கேட்டு சென்று பார்த்தோமா என்றால் நாங்கள் இருந்த பக்கத்தில் இருந்து மேட்டுப்பக்கம் தான் சத்தம் கேட்டது. போய் பார்த்தோம். பார்த்தபோது என்ன நடந்தது என்று கேட்டால் மலையானும், பிச்சைமுத்துவும் ஓடினார்கள். என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. கடந்த 04.07.2015 ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு நானும், பழனியம்மாளும், வள்ளியம்மாள் தோட்டம் அருகே விறகு

பொருக்கி கொண்டிருந்தோம் என்றும், அப்போது கன்னியம்மாள் ஆடு மேய்த்துக் கொண்டு இருந்தார் என்றும், கன்னியம்மாளின் அலறல் சத்தம் கேட்டு நானும், பழனியம்மாளும் ஓடிபோய் பார்த்தோம் என்றும், அப்போது எதிரிகள் மலையான் என்ற பழனிச்சாமி மற்றும் பிச்சைமுத்து இருவரும் கன்னியம்மாளிடம் தகராறு செய்து கொண்டு இருந்தார்கள் என்றும், கன்னியம்மாளை தகாத வார்த்தைகளால் பேசிக் கொண்டு இருந்தார்கள் என்றும், கன்னியம்மாளின் சேலையை பிடித்து இழுத்தார்கள் என்றும், கொலை மிரட்டல்விடுத்தார்கள் என்றும், நாங்கள் வந்தவுடன் என்னை எதிரிகள் மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள் என்றும், கன்னியம்மாளிடம் விசாரித்தபோது கன்னியம்மாள் எங்களிடம் எதிரிகள் இருவரும் தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டார்கள் என்று கூறினார் என்றும், நானும், பழனியம்மாளும், கன்னியம்மாளை சமாதானம் செய்தோம் என்றும், கன்னியம்மாள் சம்பவம் தொடர்பாக புகார் கொடுப்பதாக சொன்னார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2026.03.05 17:33:24 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 05/03/2026